# உதயன்

சுடர் : 41
கதிர் : 190

வியாழக்கிழமை
04 ஜூன் 2026

வைகாசி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
ரூபா 50


## வவுனியா விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழப்பு

வவுனியா, ஜூன் 4
வவுனியா, கனகராயன்குளம், பெரியகுளம் பிரதேசத்தில் ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த விபத்தில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் ஒருவர் யாழ்ப்பாண

»11

## கோத்தாவுக்கு பயணத்தடை!



கொழும்பு, ஜூன் 4
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் இரு இராணுவ அதிகாரிகளுக்கு நீதிமன்றம் வெளிநாட்டுப் பயணத் தடை விதித்துள்ளது.

»12

## திறைசேரிக்கு 695 மில்லியன் டொலர்

விரிவு பக்கம்:- 12

## விரிவுரையாளர் தயாளினி கழுத்து நெரித்தே கொலை

குற்றம் நடந்ததை உறுதி செய்தது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கொலை வழக்கில் குற்றச் செயல் ஒன்று நடந்துள்ளது என்றும், அவர் கழுத்து

»11

எழுச்சிப் பாடலைப் பாடி பகிர்ந்ததால்

## இளைஞனின் மீது பாய்ந்தது பயங்கரவாத தடைச் சட்டம்

14 நாள்கள் தடுப்புக்காவல் உத்தரவு

விரிவு பக்கம்:- 11

## செம்மணிப் புதைகுழியில் நேற்றும் 5 என்புக்கூடுகள்!

இதுவரை 275 என்புக்கூடுகள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றுப் புதிதாக 5 என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புக்கூட்டுத் தொகுதிகளில் 6 என்புக்கூட்டுத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்

»12

## பழைய பூங்காக் காணிகளைக் காக்க பொறுப்பாளர் சபை மீது நடவடிக்கை

சட்டமா அதிபரின் அனுமதிகோரிக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்ப்பாணம் பழைய பூங்கா அறக்கொடை நிதியத்தின் காணி மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில், அதன் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு

»12

## இந்திய மீனவர்கள் 30 பேர் விடுதலை

கொழும்பு, ஜூன் 4
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 30

»11



## தமிழரசு தலைமைகளுக்கு எதிராக நிர்வாகச் செயலாளர் போர்க்கொடி

- என்றுமில்லாத சண்டித்தனம் கட்சிக்குள்
- விச ஜந்துக்களும், நாகங்களும் குடி கொண்டு சன்னதமாடுவதை அனுமதிக்க முடியாது.
- மத்திய குழு உறுப்பினர்களுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
இலங்கைத் தமிழரசுக் கட்சியில் அடாத்தும், சண்டித்தனமும் மேலோங்குவதாகத் தெரிகின்றது. கட்சியின் 77 ஆண்டு கால வரலாற்றில்இடம்பெறாதவிடயங்கள் இப்போது திணிக்கப்படுகின்றன என்று கடுமையாகச் சாடியிருக்கின்றார் கட்சியின் யாழ். மாவட்டக் கிளைச் செய

»11

சிறுமி வைஷாலி கை அகற்றப்பட்ட விவகாரம்

## பொலிஸாரின் போக்கை கண்டித்தது நீதிமன்றம்!

விரைவாக இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க உத்தரவு

விரிவு பக்கம்:- 11

## கூட்டத்தில் முறைகேடு இல்லை

குலநாயகத்துக்கு சுமந்திரன் பதில்

விரிவு பக்கம்:- 12

முச்சந்தி முராரி

"அப்ப வீட்டுக்க இன்னொரு குழப்பம் தொடங்கிட்டு எண்டு சொல்லுங்கோ"








Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கொவிசெத**
திகதி 03.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4449
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள்: 14 64 67 72
விசேட எழுத்து D

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 03.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1516
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள்: 02 09 10 56

**NLB ஜய**
திகதி 03.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0475
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள்: 0 2 8 0

**மெகா பவர்**
திகதி 03.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2555
ஆங்கில எழுத்து J
சுப்பர் இலக்கம் 16
வெற்றி இலக்கங்கள்: 01 33 43 68

**மஹஜன சம்பத**
திகதி 03.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6207
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள்: 0 5 0 7 5 5

**தன நிதானய**
திகதி 03.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2237
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள்: 01 14 26 42
விசேட எழுத்து Y

**சுப தவசக்**
திகதி 03.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0323
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள்: 04 09 62

# ஐ.எம்.எப். திட்டத்தை கைவிட்டால் மீண்டும் பொருளாதார நெருக்கடி!

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 4

**சர்வதேச நாணயநிதியத்தின் செயற்றிட்டத்தைப் புறக்கணித்து, பழைய ஊழல்மிக்க நிர்வாகக் கட்டமைப்புக்குள் நாட்டை மீண்டும் தள்ள நினைக்கும் அரசியல் தரப்பினிடம் மக்கள் ஆட்சியை ஒப்படைப்பார்கள் என்று நான் நம்பவில்லை. ஏனெனில், மக்கள் இப்போது மிகவும் தெளிவாகவும் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டும் இருக்கிறார்கள் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட தவறான பொருளாதாரக் கொள்கை முடிவுகளால் தான் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. சர்வதேச நாணயத் திட்டத்தின் மூலம் வெறும் கடன் தவணையைப் பெறுவதுமட்டும் எமது இலக்கல்ல. இதனால் தான் நாட்டில் கடுமையான நிதி ஒழுக்கம் பேணப்பட்டு, வரிக் கொள்கை வினைத்திறனாக்கப்பட்டு, ஊழலுக்கு எதிரான புதிய சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. கடந்த 3 ஆண்டுகளில் எடுத்த கடினமான தீர்மானங்களால் தான் நாடு மீண்டுள்ளது. இந்த மறுசீரமைப்புக்களை மாற்றியமைக்கவோ அல்லது புறக்கணிக்கவோ முற்பட்டால் தற்போதைய அரசாங்கமும் மீளமுடியாத நெருக்கடிக்குள் சிக்கிக் கொள்ளும். - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 03.06.2026 | தினம் புதன்கிழமை
வெற்றி வாரம் 0915
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கம் 2 3 4 2 6 0

**Super Ball** DLB
திகதி 03.06.2026 | தினம் புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3181
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கம் 20 27 36 38

**சனிதா** DLB
திகதி 03.06.2026 | தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கம் 25 47 73 75
வெற்றி வாரம் 5342

**SASIRI** DLB
திகதி 03.06.2026 | தினம் புதன்கிழமை
வெற்றி வாரம் 1011
வெற்றி இலக்கம் 06 39 46

**லக்ன ராசி** DLB
திகதி 03.06.2026 | தினம் புதன்கிழமை
சிம்மம்
வெற்றி இலக்கம் 07 09 36 62
சீட்டிழுப்பு வாரம் 4893

**KAPRUKA** DLB
திகதி 03.06.2026 | தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 20
வெற்றி இலக்கம் 01 02 19 63
வெற்றி வாரம் 2357

**அத கோடிபதி** DLB
திகதி 03.06.2026 | தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கம் 03 04 06 65
வெற்றி வாரம் 3007

## தரமற்ற உப்பு விற்பனை ஒன்றரை வருடம் சிறை!

யாழ்ப்பாணம், ஜூன் 4

கோப்பாய்ப் பகுதியிலுள்ள அங்காடி ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த உப்பு பைக்கற் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற தரமற்ற உப்பு என அரச இரசாயனப் பகுப்பாய்வில் உறுதிசெய்யப்பட்டதையடுத்து குறித்த அங்காடி முகாமையாளர் மற்றும் உப்பு உற்பத்தி நிறுவன முகாமையாளர் ஆகியோருக்கு ஒன்றரை வருட சிறைத்தண்டனையும் மொத்தமாக 36 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்து யாழ். மேலதிக நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கோப்பாய் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எ. ஜோ. எர்ஷன் றோயல் குறித்த அங்காடியில் பெறப்பட்ட உப்பு மாதிரிகளின் தரம் தொடர்பில் பகுப்பாய்வுச் செய்வதற்காக அரச இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

அனுப்பிவைக்கப்பட்ட உப்பு மாதிரிகள் தரமற்றன எனப் பகுப்பாய்வுத் திணைக்கள அறிக்கை கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து குறித்த அங்காடி முகாமையாளர் மற்றும் உப்பு உற்பத்தி நிறுவன முகாமையாளர் ஆகியோருக்கு எதிராக நேற்றுமுன்தினம் யாழ். மேலதிக நீதவான் நீதிமன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தலா மூன்று குற்றச்சாட்டுகள் வீதம் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகளை விசாரணை செய்த நீதவான் எதிராளிகளுக்கு, ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 6 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 36 ஆயிரம் தண்டம் விதித்தார். அத்துடன் எதிராளிகளுக்கு ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் சிறைத்தண்டனையினை ஏககாலத்தில் அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். அத்துடன் குறித்த உப்பு பைக்கற்றுகளினை விநியோகிக்கப்பட்ட இடங்களில் இருந்து மீளப்பெறுமாறும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. (ச-26)

## வெசாக்கூடு சேதமாக்கல் தமிழ்ப்பேரவைகண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் அமைக்கப்பட்டிருந்த, வெசாக்கூடு சேதப்படுத்தப்பட்டமைக்கு, தமிழ்த் தேசியப் பேரவை கடும் கண்டம் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தத்தமது சமய மற்றும் பண்பாட்டு நம்பிக்கைகளை அனுபவிக்கும் உரிமையும், சுதந்திரமும் அனைத்து மாணவர்களுக்கும் உண்டு.

அவ்வாறே சிங்கள பௌத்த மாணவர்களுக்கும் வெசாக் மற்றும் அதுபோன்ற பௌத்த விழாக்களைக் கொண்டாடுவதற்கும், கடைப்பிடிப்பதற்கும் தடையற்ற உரிமை உண்டு. எனவே பல்கலைக்கழக வளாகத்துக்குள் வெசாக் வெளிச்சக்கூடு சேதப்படுத்தப்பட்ட விவகாரம் முழுமையாக விசாரிக்கப்பட்டு, அதற்குக் காரண மானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். என்றுள்ளது. (க-66)



# யாழ். பல்கலையில் வெசாக்கூடு சேதம்; நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் சதியா?

## விசாரணை ஆரம்பமென அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் இணைந்து உருவாக்கிய வெசாக்கூடு சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துவருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச்சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் இதுவரை எமக்கு உத்தியோகபூர்வமாக எந்தவொரு அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை. எனினும், சமூக ஊடகங்கள் வாயிலாக அறியமுடிந்த வரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மாணவர்களே இந்த வெசாக்கூட்டை மிகவும் அர்ப்பணிப்புடன் உருவாக்கியுள்ளனர்.

எனவே, இந்த நல்லிணக்க முயற்சியைச் சீர்குலைப்பதற்காக ஏதேனும் ஒரு தரப்பினரால் திட்டமிட்டு நடத்தப்பட்ட சதிச் செயலா இது என்பது குறித்துப் பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து பல கோணங்களில் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

இது தொடர்பான விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் மேலதிக விபரங்களை ஊடகங்களுக்கு வெளியிட முடியும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தென்மராட்சியில்

# அனுமதியின்றி சுண்ணக்கல் அகழ்ந்தால் சட்டநடவடிக்கை

கொழும்பு, ஜூன் 4

**தென்மராட்சிப் பிரதேசத்தில் இனிவரும் காலங்களில் அனுமதியின்றி சுண்ணக்கல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்படுவார்கள் என்று தென்மரானட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான க.இளங்குமரன் எச்சரித்துள்ளார்.**

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் விசேட கூட்டம், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, தென்மராட்சிப் பகுதியில் 'சுண்ணாம்புக்கல் அகழ்வு மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கல்' தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த புதிய விண்ணப்பங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதன்போது பல்வேறுபட்ட அத்தியாவசியத் தேவைகளுக்காகவும், கட்டுமானப்பணிகளுக்காகவும் தங்களின் சொந்தக்காணி அல்லது அனுமதிக்கப்பட்ட இடங்களில் கல் அகழவேண்டியவர்கள் இனிவரும் காலங்களில் கல் அகழவேண்டிய தேவையை உறுதிப்படுத்தி, முதலில் தத்தமது பகுதிக்குரிய கிராம உத்தியோகத்தர் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும். கிராம உத்தியோகத்தரின் பரிந்துரையுடன்அந்தவிண்ணப்பத்தைப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி, அங்கிருந்து முறையான அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும். சட்டபூர்வ அனுமதிப்பத்திரத்தைப் பெற்று, அதன்கீழ் உடைக்கப்படும் சுண்ணாம்புக்கற்கள் மாத்திரமே பிரதேசத்திலுள்ள கல்லுடைக்கும் ஆலைகளுக்குள் கொண்டு செல்ல அனுமதிக்கப்படும். சட்டவிரோதமான முறையில் கற்களை ஏற்றிவரும் வாகனங்கள் மற்றும் அதற்குப் பொறுப்பான கல்லுடைக்கும் ஆலைகளின் உரிமையாளர்களுக்கு எதிராகப் பொலிஸார் ஊடாக உடனடிச் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்றும் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் க. இளங்குமரன் அறிவுறுத்தினார். (ச-28)

## பொன். சிவகுமாரனின் 52ஆவது நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,ஜூன் 4

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் ஏற்பாட்டில், விடுதலைப் போராட்டத்தின் முதல் வித்து பொன். சிவகுமாரனின் 52ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு, உரும்பிராய் சந்தியில் உள்ள சிவகுமாரனின் நினைவிடத்தில் இடம்பெறவுள்ளது.

பொன். சிவகுமாரன் தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட இன ஒடுக்குமுறைக்கு எதிராக தன்னை முழுமையாக அர்ப்பணித்துப் போராடிய நிலையில், 1974ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட சமயத்தில் நஞ்சருந்தி தன்னுயிரை ஆகுதியாக்கினார். இவர் தமிழ் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தரப்படுத்தலுக்கு எதிராக, தமிழ் மாணவர் பேரவையில் தன்னை முழுமையாக இணைத்துப் போராடியவர். உலகத் தமிழராட்சி மாநாட்டுப் படுகொலை உள்ளிட்ட தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட ஆயுதவழியிலான வன்முறைகளையும், அடக்குமுறைகளையும் எதிர்த்து தன்னுயிரை இனத்துக்காக தியாகம் செய்தவர். இவரது நினைவேந்தலில் உணர்வாளர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு பிரதேச சபை அழைப்பு விடுத்துள்ளது. (க-26)

## டெங்கு பெருகும் சூழல் 14 பேருக்குத் தண்டம்



யாழ்ப்பாணம்,ஜூன் 4


கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில், கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்ட டெங்குக் களப்பரிசோதனைகளில் 14 பேருக்கு, தலா 10 ஆயிரம் ரூபா வீதம் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. கோப்பாய், இருபாலை, நீர்வேலி உள்ளிட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில், டெங்கு நுளம்புக் குடம்பிகள் பெருக்கத்துக்கு ஏதுவான சுற்றாடல் அவதானிக்கப்பட்டது. இதனையடுத்து கோப்பாய், இருபாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எ. ஜோ. எர்சன் றோய் மற்றும் சு. உதயபாலா ஆகியோர், யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வழக்குகள் தாக்கல் செய்தனர். வழக்குகளை விசாரணை செய்த நீதவான், 14 பேருக்கும் தண்டம் விதித்தார். (க-26,20)

## ரூபா வீழ்ச்சி

கொழும்பு,ஜூன் 4

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் விலை நேற்று வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாளாந்த நாணயமாற்று விகித அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 328.00 ரூபாயாகவும், அதன் விற்பனை விலை 337.97 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது. (ச-இ)



## பஸ் கட்டணம் அதிகரிக்காது

கொழும்பு,ஜூன் 4

எரிபொருள் விலை உயர்ந்தபோதிலும், தற்போதைய பேருந்துக்கட்டணங்களில் உயர்வு இருக்காது என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார். தற்போது நடைமுறையில் உள்ள பேருந்துக்கட்டண முறையின் பிரகாரம், பேருந்துக்கட்டணங்கள்மாற்றியமைக்கப்படும். அதன்படி, எரிபொருள் விலை மாற்றங்கள் காரணமாக பேருந்துக் கட்டணங்களில் திருத்தம் செய்ய வேண்டுமானால், அந்த மாற்றம் 4 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ச-இ)

## ஆடுற மாடும் மண்டபமும்..!

'காரியம் ஆகவேணுமெண்டால் கழுதையின்ர காலையும் பிடிக்கிற' கெட்டித்தனம் பக்கத்து நாட்டுக்காரரிட்ட நல்லாவே இருக்கு. இப்ப அவையின்ர முழு நோக்கமும் உந்த யாழ்ப்பாணம் திருவள்ளுவர் மண்டபத்தை எப்பிடியாவது மாநகரசபையிட்ட இருந்து பிடுங்கி மத்திய அரசாங்கத்திட்டக் குடுக்கவேணும் எண்டதுதான். உந்தக் கலாசார மண்டபத்தைக் கட்டேக்கையே அதை மத்திய அரசாங்கத்திட்டக் குடுக்கிறதுதான் அவையின்ர பிளான். ஆனால் 'மத்திய அரசாங்கத்துக்குக் குடுக்கிற கட்டடத்தை எதுக்கு இஞ்சயுள்ள முனிசிபல் காணிக்குள்ள கட்டுகினம்? அப்பிடியொண்டும் தேவையில்லை' எண்டு எதிர்ப்பு வந்திடும் எண்டது பக்கத்து நாட்டுக்காரருக்கு முதலே தெரியும். அதாலதான் அவை 'நாங்கள் கட்டித்தாறம், யாழ்ப்பாணம் முனிசிபல் அதைப் பராமரிக்கட்டும்' எண்டு ஒப்பந்தம் போட்டு, எதிர்ப்பொண்டும் வராமல் கட்டி முடிச்சிட்டினம். யாழ்ப்பாணத்திலேயே உயரமான எல்லா வசதியளும் கொண்ட இந்த மண்டபத்தைப் பராமரிக்கிறதும், யானையைக் கட்டிச் சாப்பாடு போட்டு வளர்க்கிறதும் ஒண்டுதான். கண்ணுக்கு முன்னால காசு கரைஞ்சு போகும். அப்பிடி மண்டபத்தைப் பராமரிக்க கனக்கக் காசு போனால் முனிசிபலுக்குள்ள சிக்கல் வரும். பிறகு 'இப்பிடியொரு பெரிய மண்டபத்தைப் பராமரிக்கிறதும், அதுக்கான கரண்ட்பில் கட்டுறதும் எங்களால முடியாது. இப்பிடி தேவையில்லாமல் செலவழிக்கிறதைவிட பேசாமல் அந்த மண்டபத்தை மத்திய அரசாங்கமே பராமரிக்கட்டும்' எண்டு முனிசிபல் காரர் வருவினம் எண்டு தான் பக்கத்துநாட்டுக்காரர் கணக்குப் போட்டவை.

அப்பிடிப் பழம் நழுவி பாலில விழும் எண்டு இவையள் பார்த்துக்கொண்டிருக்க, கடைசியில அது இலவு காத்த கிளி மாதிரி ஆகிடுமோ எண்டு நினைக்கிற அளவுக்கு முனிசிபல் காரர் அந்த மண்டபத்தை மத்திய அரசாங்கத்திட்ட தாரை வார்க்க முன்வரேலை. இனியும் சும்மா இருந்தால், அப்பிடியே அந்த மண்டபம் முனிசிபலின்ர சொத்தாவே மாறிப்போடும், தாங்கள் போட்ட திட்டம் பலிக்காது எண்டது பக்கத்துநாட்டுக்காரருக்கு விளங்கிட்டுது. அதால இனியும் 'முனிசிபலே முனிசிபலே இறகு போடு' எண்டு கெஞ்சிக்கொண்டிராமல், தாங்களே அந்த மண்டபத்தைப் பராமரிக்கிற பொறுப்பை முனிசிபலிட்ட இருந்து பிடுங்கி, அதை தாங்கள் நியமிச்ச ஒரு நிதியம் நிர்வகிக்கிற மாதிரி பக்கத்துநாட்டுக்காரர் ஏற்பாடுகளில இறங்கிச்சினம். அப்பிடி நிதியத்திட்ட மண்டபத்தைக் கைமாத்தினால் பிறகு அந்த நிதியம் மூலமா பிறகு மத்திய அரசாங்கத்திட்ட காதும் காதும் வைச்சமாதிரி இந்த மண்டபத்தைக் கையளிக்கலாம் எண்டதுதான் அவையின்ர இப்பத்தைய பிளான். ஆனால் அதுக்கு முனிசிபல் ஒத்துக்கொள்ளேலை. 'எங்களால மண்டபத்தைப் பராமரிக்க முடியும். இதுக்கொண்டும் நிதியம் தேவையில்லை' எண்டு முகத்தில அடிச்சமாதிரி ஒரே குரலில சொன்னதால, இப்ப பக்கத்துநாட்டுக்காரர் திரிசங்கு சொர்க்க நிலையில என்ன செய்யிறதெண்டு தெரியாமல் முழுசுகினம்.

ஆடுற மாட்டை ஆடிக்கறக்கோணும், பாடுற மாட்டைப் பாடிக்கறக்கோணுமெண்ட வித்தையை இந்த மண்டப விசயத்திலயும் பாவிக்கிறதுக்காக, கொழும்பில இருந்த தூதுவர் திடீரெண்டு யாழ்ப்பாணம் வந்து, முனிசிபல் காரரிட்ட 'எங்களிட்ட நீங்களாத் தாறது நல்லது. தராட்டி பறிக்கவும் முடியும். அதால எங்களுக்குச் சாதகமா முடிவெடுக்கப் பாருங்கோ' எண்டு 'மென்வலுவா' வெருட்டியிருக்கிறார். அதுவும் பத்தாது எண்டு யாழ்ப்பாணத்தில இருக்கிற புத்திஜீவியள், சிவில் சமூகக்காரர், கடைக்காரர், முதலாளிமார், அல்லுசில்லுகள் எண்டு தெரிஞ்செடுத்த சில மேல்மட்டக்காரரைக் கூப்பிட்டுச் சாப்பாடு குடுத்து 'நாங்கள் யாழ்ப்பாணத்துக்கு கனக்க அபிவிருத்தியள் செய்யப்போறம். நீங்கள் உந்த முனிசிபல் காரருக்கு அழுத்தம் குடுத்து திருவள்ளுவர் மண்டபத்தை நாங்கள் அமைக்கிற நிதியத்திட்ட குடுக்கச் சொல்லி அழுத்தம் குடுங்கோ' எண்டு உருவேத்தி இருக்கினமாம். இப்பிடி எல்லாப்பக்கத்தாலையும் அந்த மண்டபத்தை தாரைவார்க்கப் பண்ணுறதுக்கு பக்கத்துநாட்டுக்காரர் தலையால கிடங்கு கிண்டுகினம். பாப்பம் அவையின்ர பாச்சா பலிக்குதோ இல்லையோ எண்டு.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய மஹோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை, வரைதலுக்காக உற்சவக் குருமணி சிவஸ்ரீ மு.பலகுமாரக் குருக்களிடம், ஆலய நிர்வாகத்தினரால் நேற்றுச் சம்பிரதாயபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது. (க)

# நாயனார் குருபூசை

**யாழ்ப்பாணம்,ஜூன் 4**

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாதிரி அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் மற்றும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஆகியோரின் குருபூசை விழா நாளை** வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவாலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா. அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சின்னத்துரை ரமணராஜா கலந்துகொள்வார். குருபூசையைத் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாதிரி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வு நடைபெறும். (க)

# சித்திரக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன் 4

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவிகள் சிவகலை, கோவர்த்தனி ஆகியோரின் மகிழ்வின் நிறங்கள் சிறுவர் சித்திரக் கண்காட்சி எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும், எதிர்வரும் 13ஆம் திகதி சனி மற்றும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாள்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை அதிபர் வரணியூர் சைவப் புலவர் சி. கா.கமலநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண அழகியல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.இராஜன், சிறப்பு விருந்தினர்களாக இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் தி.அபராஜிதன், தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந. திருவாசகன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)

நாடு முழுதும் முன்னெடுக்கப்படும் ஆயிரம் கிராமங்களில் ஆயிரம் வேலைத்திட்டங்களின் கீழ், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கான வேலைத்திட்டத்தை, நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் நேற்றுமுந்தினம் ஆரம்பித்து வைத்தார். (க-17)



# மஹோற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூன் 4

கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்த சுவாமி ஆலயத்தின், மகோற்சவம் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும் திருவிழாக்களில், எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை இரவு 8.30 மணிக்கு திருமஞ்சத் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை இரவு 8:30 மணிக்கு கைலாசவாகனத் திருவிழாவும், எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் நடைபெறும்.

தொடர்ந்து எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-159)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டுவருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**மிதுனம்:** குலதெய்வ அருள் கிடைக்கும் நாள். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச்செலவாக இருக்கும் என்பது ஆறுதல் தரும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்டஉதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# விரிக்கப்படும் சதி..!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த வெசாக்கூடு அடித்து உடைத்துச்சேதப்படுத்தப்பட்டமை தொடர்பில் சமூகவலைத்தளப் பரப்பில் பெரும் விவாதங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பொதுவாகவே, நேர்மறையான விடயங்களைவிடவும், எதிர்மறையான விடயங்களுக்குத்தான் சக்திஅதிகம். அவை மக்களை ஈர்ப்பதும், பரவுவதும், கருத்துருவாக்கம் பெறுவதும் பலமடங்கு வேகமும், வீரியமும் மிக்கன. அத்தகைய நிலைதான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெசாக்கூடு சேதப்படுத்தப்பட்ட விடயத்திலும் நிகழ்ந்திருக்கின்றது. தீரவிசாரித்தல் என்பது இல்லாமல் - மெய்ப்பொருளைப்புறமொதுக்கி=மனம்போன போக்கில் பதிவுகளும் விவாதங்களும் சமூக வலைத்தள வெளிகளை நிறைத்துள்ளன. இதனால் ஏற்படும் ஆபத்தை =பாதிப்பை= கிஞ்சித்தும் பொருட்படுத்தும்நிலையில் கணிசமானவர்கள் இல்லை என்பதே கசப்பான உண்மை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்திலேயே சம்பவத்துடன் தொடர்புடைய வெசாக்கூடு அமைக்கப்பட்டிருந்தது. இந்த விழாவை ஏற்பாடு செய்ததிலும், வெசாக்கூடுகளை அமைத்ததிலும் கணிசமான பங்களிப்பை தமிழ் மாணவர்கள் வழங்கியிருந்தனர். இன்னும் சில தமிழ் மாணவர்கள்அந்த நிகழ்வின் பிரதான ஏற்பாட்டாளர்களாகவும் உள்ளனர். எனவே, இந்த வெசாக்கூடுகளை அடித்து உடைக்கவேண்டும், சேதப்படுத்த வேண்டும்என்றஅவசியம்தமிழ்மாணவர்களுக்கு ஏன் ஏற்பட வேண்டும்? யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மதிலால் இரவிலும், பின்னிரவிலும் பாய்ந்து உள்நுழைந்த சிலரே இந்தத்தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று முகாமைத்துவகற்கைகள் வணிக பீட பீடாதிபதி ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளார். இந்தச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரிடமும் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றப்பின்னணி மர்மமாக உள்ள நிலையில், இதை தமிழ் மாணவர்களுடன் தொடர்புபடுத்தியதன் நோக்கம்தான் என்ன?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் மட்டுல்லாமல், பல்கலைக்கழகம் முழுவதும் தமிழ் மாணவர்களும், சிங்கள மாணவர்களும் மிகவும் சகோதரத்துவத்துடன் செயற்பட்டு வருகின்றனர். அவர்களிடத்தில் மனக் கசப்புகளை உண்டாக்கி இன ரீதியான விரிசல்களை ஏற்படுத்தவேண்டிய தேவைகள் இன்று பலருக்கு இருக்கவேசெய்கின்றன. எனவே, அத்தகைய வெளிப்புறச் சக்திகளால் இந்தச் சம்பவம் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க அதிகளவு வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. எனவே, பனிப்பாறைபோன்று கண்ணுக்குத் தெரிந்த பகுதியை வைத்து எடைபோடாமல், கண்ணுக்குத்தெரியாத பகுதிகள் தொடர்பில் ஆழமாகச்சிந்திப்பதே உசிதமான நடவடிக்கையாக அமையும். இலங்கையின் அரசியல் வரலாறு இனமோதலாலும், பிரிவினைகளாலுமே கட்டமைக்கப்பட்டுள்ளது. இங்கு இன நல்லிணக்கத்தை அன்றி, பிரிவினையை ஏற்படுத்துவது அத்தனை இலகுவான செயல். எனவே, அதை நோக்கிப் போடப்படும் இந்த எத்தனங்களை, சதியை மாணவர்களும், மக்களும் தோற்கடிக்க வேண்டும். மாறாக, சதிவலையில் அள்ளுண்டு போகக்கூடாது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்**

**பொருள்:** ஒழுக்கம் உடையவராக வாழ்வதே உயர்ந்த குடிப் பிறப்பின் தன்மையாகும்; ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாகிவிடும்.




# அநுரவின் ஆட்சியிலும் பழிவாங்கல் வேட்டை!



கொழும்பு,ஜூன் 4

**தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் சட்டம் இருவேறு விதமாக செயற்படுகின்றது என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.**

ஆளுங்கட்சியினருக்கு சட்டத்துக்கு அப்பால்சென்று செயற்படமுடிகின்றது. எதிரணியில் இருப்பவர்கள்தான் சட்டத்துக்கு உட்பட்ட வகையில் செயற்படவேண்டியுள்ளது. தமக்கு ஏற்பட்ட வகையிலேயே ஆளுங்கட்சி விசாரணை முன்னெடுக்கின்றது. தமக்கு எதிரான அரசியல்வாதிகள்மீது விசாரணை வேட்டை இடம்பெறுகின்றது. இவ்வாறு ஆளுங்கட்சியினருக்கு ஒரு விதத்திலும், எதிரணியினருக்கு வேறொரு விதத்திலுமே சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆளுங்கட்சியினருக்கு எதிராக முறைப்பாடு செய்தால் குழுக்கள் அமைக்கப்பட்டு, விசாரணை திசை திருப்படுகின்றது. அரசாங்கத்தின் ஆயுளை மக்களே தீர்மானிப் பார்கள். எனவே, மக்கள் உரிய பதிலை வழங்குவார்கள். என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-44)

## சுற்றுலாவிகள் வருகை மே மாதத்தில் உயர்வு!

கொழும்பு,ஜூன் 4

மே மாதத்தில் மட்டும் 145,745 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இது 2025ஆம் ஆண்டு மே மாதத்தில் பதிவான 132,919 சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் ஒப்பிடும்போது 9.65% வளர்ச்சியாகும். அதிகப்படியாக இந்தியாவிலிருந்து 250, 260 சுற்றுலாப் பயணிகளும்,பிரித்தானியாவில் இருந்து 98,093 பயணிகளும், ரஷ்யாவிலிருந்து 76,073 பயணிகளும் வருகைதந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## ஆடைத் தொழிற்சாலையில் தீ விபத்து: 22 பேர் காயம்!

கொழும்பு, ஜூன் 4

எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் நேற்று புதன்கிழமை ஏற்பட்ட திடீர்த் தீ விபத்தில்சிக்கி அங்கு பணிபுரிந்த சுமார் 22 பெண் ஊழியர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். எம்பிலிபிட்டிய நோனாகம வீதியில், சுதுபாலமபகுதிக்கு அருகில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலையின் களஞ்சிய அறை ஒன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்பதுடன், எம்பிலிபிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுவருகின்றனர். (ச-இ)

## தொழிற்றுறை அபிவிருத்திச் சபை தலைவராக யசஸ் ஹேவகே

கொழும்பு, ஜூன் 4

தொழிற்றுறை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராக யசஸ் ஹேவகே கடந்த திங்கட்கிழமை பதவியேற்றுள்ளார்.

புதியதலைவராக பதவியேற்றுள்ள யசஸ் ஹேவகே வங்கி மற்றும் நிதி வணிக உத்திகள் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை தொழில் முனைவோர் மேம்பாட்டு மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் சுமார் 20 ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்ட தொழில்முறை நிபுணராவார். (ச-இ)

டித்வா அனர்த்தம்

# வீட்டு வாடகை நிவாரணம் மேலும் 3 மாதங்கள் நீடிப்பு!

கொழும்பு.ஜூன் 4

டித்வா அனர்த்தம் காரணமாக வீடுகளை இழந்து, குடியிருப்பதற்கு வீடற்ற நிலையில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் தங்களது வீடுகளை நிர்மாணிக்கும் வரை தற்காலிகமாக வேறு இடத்தில் தங்கியிருப்பதற்காக வழங்கப்பட்ட வீட்டு வாடகைக் கொடுப்பனவுக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த கொடுப்பனவை 6 மாதங்களில் இருந்து 9 மாதங்கள் வரை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை- வைகாசி 20
05.06.2026
சுபநேரம் : 04.22 – 05.52
ராகுகாலம் : 11.52 – 01.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# காதலை ஏற்க மறுத்த யுவதி வெட்டிக்கொலை

பொலநறுவை, ஜுன் 4

பொலநறுவை மெதிரிகிரியை பிரதேசத்தில் இளம் யுவதி ஒருவர் அவரது அயல்வீட்டு இளைஞரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூரச் சம்பவம் கடந்த சனிக்கிழமை திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

தனியார் வங்கியொன்றில் ஊழியராகக் கடமை யாற்றி வந்த 22 வயதுடைய இளம் பெண்ணே உயிரிழந்துள்ளார். படுகொலை செய்யப்பட்ட யுவதியை அவரது அயல் வீட்டில் வசிக்கும் 28 வயதுடைய இளைஞர் ஒருவர் நீண்டகாலமாகக் காதலித்து வந்துள்ளார். எனினும் இளைஞரின் காதலை அந்த யுவதி தொடர்ச்சியாக மறுத்து வந்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அந்த இளைஞர் யுவதியை கூரிய ஆயுதத்தால் வெட்டிப் படுகொலை செய்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர் பிரதேசத்தை விட்டுத் தப்பியோடியுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்யப் பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

# தனிமையில் வாழும் முதியவர்களிடம் கொள்ளை, கொலைச் சம்பவங்கள்!

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஜுன் 4

**நாட்டில் பிள்ளைகள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு அல்லது வெளிப்பகுதிகளுக்குச் சென்றுள்ளதால், தனிமையில் வாழ வேண்டிய முதியவர்களை இலக்கு வைத்துக் கொடூரமான கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் கொலைகள் அரங்கேற்றி வருகின்றன. இதுதொடர்பில் மக்கள் அவதானம் செலுத்தவேண்டும் என இலங்கை பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.**

தற்போதைய சூழ்நிலையில் தனிமையில் வாழும் முதியவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மிகவும் உணர்வுபூர்வமான மற்றும் அத்தியாவசியமான பொறுப்பாகும். போதைப்பொருளுக்கு அடிமையான சில குற்றவாளிகள், பணம் மற்றும் தங்கநகைகளை மிக இலகுவாகக் கொள்ளையிடும் நோக்கில், முதியவர்கள் தனிமையில் இருக்கும் வீடுகளைக் கண்காணித்துத் திட்டமிட்டுத் தாக்குகின்றனர். சில சந்தர்ப்பங்களில் முதியவர்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

முதியவர்கள் வாழும் வீடுகள் தொடர்பாகப் பொதுமக்கள் மற்றும் அயலவர்கள் கூடுதல் அவதானம் செலுத்தவேண்டும்.

அறிமுகமற்ற அல்லது நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்படாத எவரையும், எவ்வித வீட்டுப் பணிகளுக்காகவும் வீட்டுக்குள் அனுமதிப்பதைத் தவிர்க்கவேண்டும்.

பெற்றோரையும் முதியவர்களையும் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்துவதை இயன்றவரை குறைத்து, அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன் தொடர்பில் பிள்ளைகள் தொடர்ச்சியான விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும் என்றும் இலங்கைப் பொலிஸார் பொதுமக்களிடம் வலியுறுத்தியுள்ளனர். (ச-இ)

# சிவாஜிலிங்கத்துக்கு ரூ.4,50,000 நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜுன் 4

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்காக, வல்வை உதயசூரியன் கழகம் மற்றும் வல்வை விக்கினேஸ்வரா சனசமூக சேவா நிலையம் ஆகியன நிதியுதவி வழங்கியுள்ளன. கனடா, லண்டன் வாழ் உறுப்பினர்கள், வல்வை உதயசூரியன் கழக நிர்வாகத்தின் மூலம் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளனர். வல்வை உதயசூரியன் கழக அங்கத்தவர்கள் நேரில் சென்று நிதியுதவியை வழங்கினர். (க-100)



# கடற்கொந்தளிப்பு மக்கள் அவதானம்


கொழும்பு, ஜுன் 4

இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பலத்த காற்று மற்றும் கொந்தளிப்பான கடல் நிலைமை காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

முல்லைத்தீவிலிருந்து காங்கேசன்துறை, மன்னார், புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவிலுக்கான கடற்கரைக்கு அப்பாற்பட்ட கடற்பகுதிகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.

இதன் காரணமாக, இந்தக் கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பானதாகக் காணப்படும். குறித்த கடற்பிராந்தியங்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களும், கடற்படை சமூகத்தினரும் விழிப்புடனும், அவதானத்துடனும் செயற்படவேண்டும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)





# அமெரிக்காவின் ஹெலிகள் இலங்கையை வந்தடைவு!

கொழும்பு, ஜுன் 4

அமெரிக்க அரசாங்கத்தினால் இலங்கை விமானப்படைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 10 ஹெலிகொப்டர்கள் கடல் வழியாக இலங்கையை வந்தடைந்துள்ளன.

இலங்கையை வந்தடைந்துள்ள இந்த ஹெலிகொப்டர்கள் தற்போது இரத்மலானையில் உள்ள இலங்கை விமானப் படைத் தளத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு, அங்கு அவற்றுக்கான தொழில்நுட்பக் கட்டமைப்பு மறுசீரமைப்புகள் மற்றும் ஆரம்பகட்டப் பிரத்தியேகத் தயாரிப்புகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

மாதிரி சோதனைப் பறப்புகள் வெற்றிகரமாக நிறைவடைந்த பின்னர், இந்த ஹெலிகொப்டர்கள் உத்தியோகபூர்வமாகச் சேவையில் இணைக்கப்பட்டு செயற்பாட்டுக் கடமைகளுக்காக நாடு முழுவதும் நிறுத்தப்படும் என இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது. (ச-இ)

# அனலைதீவுக்கு புதிய பேருந்து

யாழ்ப்பாணம், ஜுன் 4

அனலைதீவுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் புதிய பேருந்து, நேற்றுமுன்தினம் முதல் உள்ளூர் போக்குவரத்துச் சேவைக்காக இணைக்கப்பட்டுள்ளது. குறித்த பேருந்து, கடற்படையினரின் உதவியுடன் அங்கு கொண்டு செல்லப்பட்டு, சேவையில் இணைக்கப்பட்டுள்ளது. மக்களால் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, புதிய பேருந்து சேவையில் இணைக்கப்பட்டுள்ளது. இதனூடாக மக்களது உள்ளூர்ப் போக்குவரத்து நெருக்கடி, ஓரளவுக்கு இலகுவாக்கப்பட்டுள்ளது. (க-17)



காணி விற்பனை

4 1/2 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு.
இல. 32 கதிரேசு வீதி, வைரவப் புளியங்குளம், வவுனியா.
தரகர்கள் தேவையில்லை.
தொடர்புகளுக்கு:- 0094 773 867 036
CR(47630) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள் 2026



ஆண்டுக்கு ஒருமுறை பெயர்ச்சி அடையக்கூடிய குரு பகவான் இந்தப் பராபவ வருடத்தில், வாக்கியப் பஞ்சாங் கத்தின்படி 26.05.2026 அன்று பகல் 11 மணிக்கு மிது னம் ராசியில் இருந்து தனது உச்ச ராசியான கடகத்துக்குப் பெயர்ச்சியாகின்றார். திருக்கணித பஞ்சாங்கத்தின் படி ஜுன் 2 ஆம் திகதி பெயர்ச்சி நடக்கின்றது என்று ஜோதிடர்கள் தெரிவிக் கின்றனர். குருவின் இந்த நகர்வால் அதிர்ஷ்டமான மற்றும் கவ னமுடன் இருக்கவேண்டிய ராசியினர் யார்?, அவர்களுக்கான ஒருவருட பலன்கள் என்ன என்பதை இங்கு பார்ப்போம்.




**முடியும் என்பது மூலதனம், முடியாது என்பது மூடத்தனம் என்ற வரிகளுக்கு ஏற்ப தொடர்ந்து முயற்சித்து வெற்றி பெறும் கடக ராசிக்காரர் களே!**

குருபகவான், ஜுன் 2 முதல் உங்கள் ராசிக்குள் ளேயே அமர்ந்து பலன் தரப்போகிறார். 'ஜென்ம குருவாயிற்றே...' என்று பதற்றம் அடையாதீர்கள். குருபகவானின் பார்வை பலன்கள் உங்களுக்கு ஓர ளவுக்கு சாதகமான சூழலைத் தரும். பூர்வீகச் சொத்து இப்போது கைக்குவரும். கம்பீரமாகப் பேசு வீர்கள். குடும்பத்தினருடன் இருந்துவந்த மனக்கசப்பு கள் விலகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். அரசு வேலைகளில் இருந்த இழுபறி நிலை மாறும்.

ஜென்ம குரு என்பதால் வெளிவட்டாரத்தில் கொஞ்சம் கவனமாகப் பழகுங்கள். உடல் ஆரோக்கியத்தில் அலட்சியம் காட்டாதீர்கள். நடைப்பயிற்சி, யோகா செய்வது நல்லது. சர்க்கரை நோய், இரத்தக் கொதிப் பின் அளவை சரிபார்த்துக் கொள்ளுங்கள். திட்ட மிட்டபடி வெளிநாட்டுப் பயணங்கள் சாதகமாக அமையும். அக்கம்பக்கம் வீட்டாரிடம் குடும்ப இரகசி யங்களை சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.

**குரு பகவான் பார்வைப் பலன்கள்:**
குரு பக்வான் உங்கள் ராசிக்கு 5ஆம் இடத்தைப் பார்ப்பதால், நீண்ட நாளாக குழந்தை இல்லாத தம் பதிக்கு இப்போது வாரிசு உருவாகும். பிள்ளைகளின் விருப்பங்களைப் பூர்த்திசெய்வீர்கள். பூர்வீகச் சொத் தால் ஆதாயம் உண்டு. புது நண்பர்கள் அறி முகமாவார்கள். சில ருக்கு வீடு வாங்கும் அமைப்பு உண்டாகும்.

குரு பகவான் 7ஆம் வீட்டைப் பார்ப்பதால், வீட்டில் தாமதமான சுபநிகழ்ச்சிகள் இனி கோலாகலமாக நடக்கும். எதிர்பார்த்தவகையில் உதவிகள் கிடைக் கும். குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு. கணவன் - மனை விக்குள் விட்டுக்கொடுத்துப் போவீர்கள். உங்கள் ராசிக்கு பாக்கிய வீடான 9ஆம் வீட்டில் குருவின் பார்வை விழுவதால், மறைந்து கிடக்கும் திறமைகள் வெளிப்படும். யாரையும் விமர்சிக்காதீர்.

**நினைத்த காரியங்கள் கைகூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் மற்றும் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.**

**குரு பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
உங்களின் சஷ்டம பாக்யாதிபதியு மான குருபகவான் தனது நட்சத்திரத்தில் 02.06.26 முதல் 18.06.26 வரை பயணம் செய்வதால் பணவரவு திருப்திகரமாக இருக்கும். விரும்பிய பொருள்களை வாங்குவீர்கள். பிரபலங்களின் அறிமுகம் கிடைக்கும்.

சப்தம அஷ்டமாதிபதியுமான சனிபகவானின் நட் சத்திரத்தில் 18.06.26 முதல் 19.08.26 வரை குரு பகவான் பயணம் செய்வதால் குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போகவும். தைரிய விரயாதிபதியுமான புதனின் நட்சத்திரத்தில் 19.08.26 முதல் 31.10.26 வரை மற்றும் 25.01.27 முதல் 26.06.27 வரை குருபகவான் பயணம் செய்வதால் புதிய பொறுப்பு கள் தேடிவரும்.

கேதுவின் நட்சத்திரத்தில் 31.10.26 முதல் 25.01.27 வரை குருபகவான் செல்வதால் பேச்சுத் திறன் அதிகரிக்கும். குடும்ப வருமா னத்தை உயர்த்துவீர். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டு. பிரப லங்களின் நட்புக் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை நம்பி முக் கியமான பொறுப்புகளை ஒப்படைப்பார். பதவி, சம் பள உயர்வு உண்டு. பணிகளை முடிப்பதில் அலட் சியம் காட்டாதீர்கள். சக ஊழியர்களிடம் குடும்ப விஷயங்களைச் சொல்லவேண்டாம். கணினித் துறையினருக்கு வெளிநாட்டில் வேலை கிடைக் கும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். விமர்சனங்களுக்கு செவி சாய்க்காதீர்கள். இந்தக் குருப்பெயர்ச்சி கடும் முயற்சியால் இலக்கை எட்டும் காலமாக அமையும்.

# கிளிநொச்சி மருத்துவமனையில் நீரிழிவுச் சோதனையில் இடர்பாடு

கிளிநொச்சி, ஜுன் 4
கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில், கர்ப்பிணிகள் நீரிழிவுப் பரிசோதனை மேற்கொள்வதற்கு பெரும் இடர்களைச் சந்தித்துவருவதாக நோயாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறித்த மருத்துவமனையில், பெண்நோயியல் சிகிச்சைப்பிரிவின் முழு மையான செயற்பாடுகள் இதுவரை ஆரம்பிக்கப்படாமையால், நவீன தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் செயற்பா டற்றுள்ளன.

குறிப்பாக கர்ப்பிணிகள் கட்டாயம் மேற்கொள்ளப்படவேண்டிய நீரிழிவு நோய்க்கான பரிசோதனைகளை, தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

இதற்காக ஒரு தடவைக்கு ஆயிரம் ரூபா முதல் ஆயிரத்து 500 வரை செலவிடவேண்டியுள்ளது. கருத்தரித்த காலத்தில் இருந்து 10 மாதங் களுக்கு குறித்த பரிசோதனை மேற்கொள்ளவேண்டியிருப்பதால், குறைந்த வருமானங்களைக் கொண்டவர்கள் தனியார் மருத்துவமனை களுக்குச் செல்லமுடியாதுள்ளனர். எனவே இதுதொடர்பில் உரிய அதி காரிகள் மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-55)



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வரு டாந்தத் திருவிழா, கடந்ததிங்கட்கிழமை கொடியேற்றத்து டன் ஆரம்பமா னது. தொடர்ந்து எதிர்வரும் 13ஆம் திகதி திருச்சொருப பவனியுடன் திரு விழா நிறைவடை யும். (க-17)


# ஆன்மிக உரை

யாழ்ப்பாணம், ஜுன் 4
சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆன்மிக உரை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோக னதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சிமைய இயக்குநர் சிவத்திரு. சபா சண்முகசுந்தரம் ஆன்மிக உரையை ஆற்றுவார். (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 09 . 1963 மறைவு 03 . 06 . 2026



(CR/47520) J-1

### வேலும் மயிலும் குருபரன்

**(வர்த்தகரும், சூர்யா மருந்தக உரிமையாளரும்)**

நவக்கிரியை பிறப்பிடமாகவும், இல.157, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வேலும் மயிலும் குருபரன் அவர்கள் நேற்று (03.06.2026) புதன்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலும் மயிலும் - இரத்தினசிகாமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஜேசுதாசன் - எலிசபேத் தம்பதியரின் பாசமிகு மருமகனும், மொறீன் சாந்தினியின் அன்புக் கணவரும், சலோமி சரணியா, தேனுகானன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷாந்த் (DFCC வங்கி முகாமையாளர்), சஞ்சுகா ஆகியோரின் அன்பு மாமனாரும், விஷ்ருத்தின் பாசமிகு பேரனும், முகுந்தன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சசிகலா (Austria), நளினிகலா (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2026) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 02.00 மணியளவில் நிலாவரை, நவக்கிரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர், பிள்ளைகள்**

**இல.157, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்**

**076 642 2308**

## மரண அறிவித்தல்

மலர்வு 05 . 04 . 1964 உதிர்வு 02 . 06 . 2026



(CS/61581) J-1

### மயில்வாகனம் திருக்குமாரன் (சிறீ)

**(ஓய்வு நிலை பிரதேசசபை ஊழியர் - வலி வடக்கு)**

மல்லாகத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் திருக்குமாரன் அவர்கள் கடந்த (02.06.2026) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் - வள்ளிநாயகி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், தம்பையா மற்றும் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரஞ்சோதி (ஓய்வுநிலை ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், காருண்யன் அவர்களின் அன்பு தந்தையும், கமலலோஜினி அவர்களின் அன்புச் சகோதரனும், சிவராசா, புவனேஸ்வரி, திருச்செல்வம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனனும், கோபிநாத், ராம்நாத், கபிலா, பிரணவநாத், தேனுஜா, ஜெயப்பிரியா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2026) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 28.09.1963 மறைவு 03.06.2026

நவக்கிரியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புக்கும் நட்புக்கும் உரிய

### வேலும் மயிலும் குருபரன்

**(சூரியா மருந்தக உரிமையாளர்)**

அவர்கள் (03.06.2026) புதன்கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்

(CS/31924) J-1

**Ambika dispensary, Ram Medical**
**Pharmax Health Care, Jeevan Medical**
**Sai Medical, Akaram Pharmacy**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## பணிப்பெண் தேவை

பருத்தித்துறையில் அமைந்துள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை.

மாதச் சம்பளம் - 60,000/-

தொடர்புகளுக்கு:- 077 086 7951

CR/47631) J-1

## வேலையாட்கள் தேவை

அபி பிறிண்டர்ஸ் நல்லூர், கல்வியங்காடு

அச்சக வேலை தெரிந்த, பழக விரும்புபவர்கள், ரைப்பிங் செற்றிங், போட்டோப் பிரதி எடுத்தல்

தொடர்புகளுக்கு:-

077 047 3970, 076 624 6307

(CR/61584) J-1

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.

ஒரு சதுர அடி - 85.00 ரூபாய்.

நிலம் இழுத்து பதிக்க - 120 ரூபாய்

077 334 1281

(CR/61520) J-1

## - VACANCY -

## LIFT TRAINEE TECHNICIANS

We are a subsidiary company of Mitsubishi Elevators & Escalators and an ISO certified company in Sri Lanka, specializing in the supply, installation, modernization, and maintenance of elevators and escalators islandwide. We are looking for young, energetic, and self-motivated individuals to join our organization for the post of Lift Trainee Technicians with opportunities for career growth and professional development in the elevator industry.

**REQUIREMENTS**

- GCE O/L with minimum 03 passes
- Age between 18 – 25 years
- Willing to work islandwide
- Interest in Electrical / Electronic / Mechanical fields
- Technical college qualifications will be an added advantage
- School leavers are encouraged to apply
- Candidates with experience in Elevators and Escalators are also encouraged to apply

**BENEFITS**

- Attractive remuneration package
- Career development opportunities
- On-the-job technical training
- Opportunity to work with a world-renowned Elevator & Escalator brand
- Exposure to modern elevator and escalator technology

**Interested applicants are requested to forward their CV with contact details within 28 days of this advertisement to:**

**Manager – Human Resource & Administration**
**MELCO ELEVATOR COMPANY LANKA (PVT) LTD**
**No.464, 3rd ~ 5th Floors, Galle Road, Colombo 03.**
**Tel: 0117066229 | Fax: 0117515154**
**Email: hrlanka@mmac.com**

A Subsidiary Company Of
MITSUBISHI ELECTRIC
ELEVATORS AND ESCALATORS




# உழவு இயந்திரத்தில் சிக்கி இளைஞர் பரிதாபச் சாவு

வவுனியா, ஜூன் 4

வவுனியா, கனகராயன்குளம் குறிசுட்டகுளம் பகுதியில் உழவு இயந்திரத்தில் சிக்குண்டு இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் குறிசுட்டகுளத்தில் அமைந்துள்ள காணி கோயிலில் வேலை செய்வதற்காக உழவு இயந்திரம் இயக்கப்பட்டுள்ளது.

இதன்போது எதிர்பாராதவிதமாக குறித்த இளைஞன் உழவு இயந்திரத்துக்கு தவறி வீழ்ந்துள்ளார். இயந்திரத்தில் சிக்குண்டு படுகாயமடைந்த அவர், சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். விபத்தில் உயிரிழந்தவர் குறிசுட்டகுளம், கனகராயன்குளத்தைச் சேர்ந்த க. குகப்பிரியன் (வயது 20) என அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சு-110)

# எபோலா, 'மெனிஞ்சைடிஸ்' தடுப்பதற்கு தயார்நிலை!

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 4

உலகளவில் பரவிவரும் எபோலா வைரஸ் மற்றும் இலங்கையில் பரவிவரும் மெனிஞ்சைடிஸ் எனப்படும் மூளைக்காய்ச்சல் நோய் நிலைமைகள் குறித்து சுகாதாரப்பிரிவினர் தீவிர கவனம் செலுத்தியுள்ளனர் என்று சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். நாட்டில் பரவி வரும் மெனிஞ்சைடிஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்குச் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அத்துடன் எபோலா நோய் தொடர்பாக தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவு விசேட கவனம் செலுத்தியுள்ளது. அதுதொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் சுகாதாரப்பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளது. சில ஆபிரிக்க நாடுகளில் தான் எபோலா முதன்முதலில் கண்டறியப்பட்டது. அதன்பின்னர் உலக சுகாதார ஸ்தாபனம் இதனை ஒரு அவசர நிலைமையாக அறிவித்தது. இதுகுறித்து தொடர்ச்சியாகக் கவனம்செ லுத்தி, எமது சுகாதாரக் கட்டமைப்புக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வெசாக் தினத்தில் சாகசம்; மோ.சைக்கிள்கள் பறிமுதல்

வெசாக் தினங்களில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அதிவேகமாகவும் ஆபத்தான முறையிலும் செலுத்தப்பட்ட 50க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களை களுத்துறை வடக்கு பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். இந்த மோட்டார் சைக்கிள்களில் சைலன்சர்கள் மாற்றப்பட்டு அதிக சத்தம் எழுப்பும் வகையில் பொருத்தப்பட்டிருந்ததாகவும், பக்க வாட்டுக் கண்ணாடிகள் இல்லாமலேயே அவை செலுத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)


## வேலையாட்கள் தேவை

புங்குடுதீவில் இயங்கிவரும் உணவகத்திற்கு வேலை ஆட்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0777 452986

(CS 31927) A


## 7th ஆண்டு கண்ணீர் நினைவஞ்சலி



மலர்வு 26.09.1989 — உதிர்வு 22.05.2019

### உமேஷ் ஜெகதீஸ்வரன்

**வைகாசி மாத அபபட்ச சங்கடகர சதுர்த்தி**


எங்கள் அன்புச் செல்வம்
நீ எம்மை விட்டுப் பிரிந்து ஏழு ஆண்டுகள்
ஆனாலும் நீ எம்முடன் தான் வாழ்கின்றாய்
உன்னை எம்மால் மறக்க முடியாது
உன்னுடன் வந்து சேரும் நாளை எதிர்பார்த்து
இருக்கின்றோம். எம்மை கூடிய சீக்கிரம்
அழைப்பாய் மகனே.

என்றும் உன் நினைவுடன்
அப்பா-ஜெகதீஸ்வரன்
அம்மா-சர்வேஸ்வரி
T.P:077 630 6697

உமேஷ் நினைவாலயம்,
கிளானை ஞான வைரவர் கோவிலடி,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

## மீளாத் துயருடன் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 29 . 08 . 1942



ஆண்டவன் அடியில் 04 . 06 . 2023

### சுப்பையாபிள்ளை கந்தசாமி

அன்பு என்றால் அப்பா! அப்பா என்றால் அன்பு!!
அன்பின் உருவமாய் வாழ்ந்த எம் அன்பு தெய்வமே!
ஆண்டுகள் மூன்றல்ல, மூவாயிரம் கடந்தாலும்
ஆறாது எம் துயரம்! அகலாது உம் நினைவுகள்!
ஆண்டவன் அடியில் அமைதி கொள்வீராக!!

மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.
077 223 1861

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 12 . 1943



மறைவு 01 . 06 . 2026

### திரு. சுப்பிரமணியம் யோகராசா

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு சொர்ணவடலியை பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு சுப்பிரமணியம் யோகராசா அவர்கள் கடந்த (01-06-2026) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தவமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கத்தசாமி - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், ஞானமிர்தம் அவர்களின் அன்பு கணவரும், கமலேந்திரன், விஜயேந்திரன், நிரஞ்சனி, காலஞ்சென்ற குமரேந்திரன் ஆகியோரின் அன்பு தந்தையும், சசீந்திரா, துஷ்யந்தி, லோகதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரன், அச்சகன், பரிதி, டினுஜன், கயல் , திவானி ஆகியோரின் பாட்டனாரும், இரத்தினசபாபதி, காலஞ்சென்றவர்களான இராசரட்ணம், பவளம், யோகேஸ்வரி, மகேந்திரன், இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரரும், ருக்குமணி, தேவி, அமிர்தலிங்கம், சோ.லோகேஸ்வரி, சண்முகலிங்கம், காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி, தியாகராஜா, பாலகிருஸ்ணர், சந்திரா ஆகியோரின் மைத்துனருமாவார்.


அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (04-06-26) வியாழக்கிழமை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கரியைக்காக நீர்வேலி சீயாக்காடு மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்

**தகவல்: குடும்பத்தினர்**
**காமாட்சி அம்மாள் கேவிலடி, குறுக்கு வீதி,**
**நீர்வேலி, யாழ்ப்பாணம்.**
Contact number - 0779260333,
94 (77) 070 4865 WhatsApp

(CS/61486) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 03 . 1945



இறப்பு 02 . 06 . 2026

### சண்முகம் தியாகராசா
(புதுறோட், காரைநகர்)

காரைநகர் புதுரோட்டைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 84, கல்லூரி வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் தியாகராசா (ஓலுமடு நெடுங்கேனி) அவர்கள் 02.06.2026 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சிவபாக்கியம் தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான A.S ஆறுமுகம் பாக்கியத்தின் மருமகனும் தனலட்சுமியின் அன்பு கணவரும் துஷ்யந்தன் (லண்டன்), சாந்தன் (நீர்கொழும்பு), குகாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகலா, தாமரைச்செல்வி, தயாபரன் (பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை) ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்ஷன், திவிஷன், நர்த்தனா, அக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும், Dr.ஜெகதீஸ்வரி, விவேகானந்தராஜா, உலகேஸ்வரி, ருக்மணிதேவி, நித்தியானந்தராஜா ஆகியோரின் அருமைச் சகோதரரும் அமரர் Dr. திருநாதன் மற்றும் பூபதி, விக்னேஸ்வரமூர்த்தி, சிதம்பரநாதன், கிருஷ்ணராணி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பொன்னம்பலம், பரமேஸ்வரி மற்றும் சரஸ்வதி, சரோஜினிதேவி, நாகேஸ்வரி, கமலவேணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2026) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு 84, கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

84, கல்லூரி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P:077 167 9798

(CS 31925)A

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

மாவட்ட முன்னாள் மாவட்டச் செயலர் இமெல்டா சுகுமாரின் மகனாவார்.

வீதியால் பயணித்த இரு இளைஞர்கள் மீதும், சொகுசுக்கார் ஒன்று மோதியதில் இந்த விபத்து நடந்துள்ளது. விபத்துக் குள்ளான சொகுசுக்காரின் பின்னால் பயணித்த ஹைஏஸ் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் சிக்கியவர்கள் சம்பவ இடத்திலேயே உயி ரிழந்துள்ளனர் என்று கனகராயன்கு ளம் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களின் உடல்கள், உடற் கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா மாவட்டப் பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த விபத் துச் சம்பவம் தொடர்பில் கனகராயன் குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-110)

## விரிவுரையாளர்...

நெரிக்கப்பட்டதாலேயே கொலையா னார் என்றும் நீதிமன்றம் முடிவுக்கு வந் துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத் துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் தயா ளினி தீலீபன் (வயது-54) கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை களை முன்னெடுத்த பொலிஸார் விரிவு ரையாளரின் மகள் மற்றும் மருமக னைக் கைது செய்தனர். விசாரணை களின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப் பட்ட சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீத வான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக் கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நடைபெற்றுவந்த மரண விசாரணை களில், சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை, பொலிஸாரின் விசாரணை அறிக்கை, சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் குற்றச்செயல் ஒன்று இடம்பெற்றுள்ளது என்பதுடன், விரிவு ரையாளர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற முடிவுக்கு நீதிமன்றம் வந்துள்ளது.

அடிப்படை விசாரணைகள் நீதிமன்றில் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், சந்தேகநபர்களைத் தொடர்ந் தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-எ-26)

## இளைஞனின்...

எழுச்சிப் பாடலைப் பாடிப் பகிர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞன் பயங்கரவாதத் தடைச் சட்டத் தின் கீழ் 14 நாள்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சியைச் சேர்ந்த சொல்லிசைக் கலைஞரான இந்த இளைஞன் சாவகச்சேரியில் அண் மையில் நடந்த ஆலயத் திருவிழா ஒன் றில் பாடல்களைப் பாடியிருந்தார். அந்த நிகழ்வின் காணொலிக்கு தனது இசைச் சேர்க்கையில் பாடிய சொல்லிசை எழுச் சிப் பாடலை இணைத்து சமூக வலைத் தளத்தில் பதிவேற்றியுள்ளார்.

இந்தப் பாடல் சமூக வலைத்தளங்களில் வைரலாகி, தென்னிலங்கையில் விமர்ச னங்களை ஏற்படுத்தியிருந்ததுடன், அங்கிருந்து இனவாத கருத்துகளும் கிளம்பியிருந்தன.

இந்தக் காணொலி தொடர்பாக விசா ரணை மேற்கொண்ட யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலி ஸார், பாடலைப் பாடிய இளைஞனை நேற்றுமுன்தினம் கைது செய்து சாவகச் சேரிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத் திருந்தனர். சாவகச்சேரிப் பொலிஸார் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, இளைஞனை நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்ப டுத்தினர். இளைஞனுக்குப் பிணை வழங்கப் பொலிஸார் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து, சந்தேகநபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (அ-எ-26)

## இந்திய...

பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சென்னையைச் சென்றடைந்துள்ளனர்.

வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய் யப்பட்ட இராமேஸ்வரம் மற்றும் காரைக் கால் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களே விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்தியா மற் றும் இலங்கை ஆகிய நாடுகளிடையே நடந்த உயர்மட்ட இராஜதந்திரப் பேச்சு களை அடுத்து இவர்கள் விடுவிக்கப்பட் டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள், கொழும்பில் இருந்து விமானம் மூலம் சென்னைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (அ-எ-இ)

## தமிழரசு...

ளாளரும், கட்சியின் நிர்வாகச் செயலா ளருமான ஆ.சே.குலநாயகம்.

யாழ்ப்பாண மாவட்ட கிளைத் தலைவர் தெரிவில் இடம்பெற்ற அடாவடித்தனச் செயற்பாடு என்ற தலைப்பில் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ள தாவது:-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப் பாண மாவட்டக் கிளைக் கூட்டம் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.15 மணி யளவில் கட்சி தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்துக்கான கடிதத்தை மாவட்ட கிளைச் செயலாளர் என்ற வகையில் நான் அனுப்பியிருந் தேன். மாவட்ட கிளைத் தலைவரான கனகசபாபதி கூட்டத்துக்கு வரமுடியாது உள்ளதாகவும், என்னைத் தலைமை தாங்கி நடத்துமாறும் கேட்டிருந்தார். கூட் டம் ஆரம்பமாவதற்கு முன் வயதையும் கருத்திற்கொண்டு மரியாதையின் நிமித் தமும் சி.வி.கே.சிவஞானத்தை தலைமை தாங்கி நடத்துமாறும் கேட்டுக்கொண் டேன். தலைமை தாங்க சம்மதித்த அவர் கூட்டம் ஆரம்பமானதும் எழுந்து நின்று கூட்டத்தை எம்.ஏ.சுமந்திரன் நடத்துவார் என அறிவித்தார்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்த போதிலும் கட்சி நலன் கருதி சமாளித்துக்கொண் டேன். தான் தலைமை தாங்காதுவிடின் என்னிடம்தான் கூறியிருக்க வேண்டும். நானே கூட்டத்தை நடத்தி முடித்து இருப் பேன். பின் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய எம்.ஏ.சுமந்திரன் அறிவித்து செயலாளர் தெரிவு இடம்பெற்றது. எம்.ஏ. சுமந்திரன், சி.வி.கே.சிவஞானத்தை தானே பிரேரித்து அந்த இடத்திலிருந்து தான் தலைமை தாங்குவதால் மாற்றுப் பிரேரணைக்கு இடமில்லை என்றும் எவ ரும் ஆமோதிக்கக் கூட தேவையில்லை என தெரிவித்த போது சபையிலிருந்த வர்கள் அதனை ஆட்சேபித்தார்கள்.

நான் கடுமையாக எதிர்த்து மற்றவர்க ளின் கருத்துக்கும் இடமிருக்க வேண்டும் என வற்புறுத்தினேன்.

இது தொடர்பான கருத்துக்களை தெரிவித் தவர்களை அடாத்தாக அமரச் செய்து அவர்களது கருத்துகளை மறுத்து சி.வி. கே.சிவஞானமே தலைவர் என அறிவித் தார். அதை ஏற்காத நான் கட்சி நலன் கருதி அமைதியாக இருந்து விட்டேன். மற்றவர்களின் கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் இடமளிக்கா மலே சிவஞானத்தை தலைமை தாங்க அமர்த்தினார். இந்தச் செயற்பாடு ஒருவ ராலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் மட்டு மல்ல வேறெந்த அமைப்புகளிலும் கூட இம்மாதிரியான அடாவடிச் செயற்பாடு கள் இடம்பெறுவது இல்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கென்று ஒழுங்கு முறை களும் நடைமுறைகளும் உள்ளன. கட்சியின் 77 ஆண்டு கால வரலாற்றில் இடம்பெறாத சம்பவங்கள் எல்லாம் இப் போது திணிக்கப்படுகின்றன. ஜனநாயக ரீதியான செற்பாடுகளில் கவனம் செலுத்த வேண்டுமென கூறுகின்ற அதேவேளை அடாத்தும் சண்டித்தனமும் மேலோங்கு வதாகத் தோன்றுகிறது. கறையான் புற் றெடுக்க கொடிய நாகங்களும், விச ஜந்துக்களும் குடிகொண்டு சன்னதமா டுகின்ற நிலை போன்று, கட்சியை அந்த நிலைக்குத் தள்ளிவிட முடியாது.

இந்த மாதிரியான தெரிவுகள் தொடர்பில் கட்சி தீவிர கவனம் செலுத்தி தகுந்த தீர் வைக் காணாது விட்டால் சுயநலத்தாலும் பதவி மோகம் என்பதற்கு அப்பால் பதவி வெறியாலும், காழ்ப்புணர்வுகளாலும், அடாவடித்தனங்கள் சண்டித்தனங்களா லும், பிரதேச வாதங்களாலும் நொருக் குண்டு பலவீனம் அடைந்திருக்கும் எம் கட்சியின் இன்றைய நிலை மேலும் மோசம் அடையும் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன். கட்சியுடனான எனது 62 ஆண்டுகாலச் செயற்பாடுகளை எண்ணிப் பார்க்கிறேன். வழிப்போக்க னாக இருந்துவிட்டு பதவி பெறுவதற்காக கட்சியில் சேர்ந்து இலாபம் அல்லது ஏதும் உதவி பெற்றவன் அல்ல நான். இலக்கைத் தமிழரசுக்கட்சி மீது இருக்கும் பேரார்வத்தாலேயே இக் கடிதத்தினை எழுதுகிறேன். இதனை மத்திய செயற்கு ழுவில் ஆய்வு செய்து தகுந்த தீர்வைக் காணவேண்டுமென கேட்டுக்கொள்கி றேன். தலைமைச் செயலகத்தில் 31.05.2026 அன்று நடைபெற்ற கூட் டத்தில் இடம்பெற்ற தலைவர் தெரிவுஎந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத தும், கண்டிக்கப்பட வேண்டியதுமாகும். எதிர்காலத்தில் இப்படியான நடைமுறை களை வரும் சந்ததியினருக்கு விட்டுச் செல்லக்கூடாது. இந்த விடயம் முன்று தாரணமாக கொள்ளப்பட்டு கட்சி சின் னாபின்னமாக்க இடமளிக்கக் கூடாது என்பதற்காக இந்தக் கடிதத்தை எழுதுகி றேன். கடிதத்தை ஏற்று மாவட்ட தலை வர் தெரிவு பற்றிய மத்திய செயற்குழு ஏற்று நடவடிக்கை எடுக்கும் என்று எதிர் பார்க்கிறேன். இந்தச் செயற்பாடு தொடர் பாக எனது கடுமையான எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கி றேன் - என்றுள்ளது. (அ-எ-இ)

## பொலிஸாரின்...

சிறுமி வைஷாலியின் கை அகற்றப்பட்ட வழக்கில், காலத்தை இழுத்தடித்து நீதி மன்றத்தின் நேரத்தை வீணாக்கும் பொலிஸாரின் போக்கைக் கண்டித்த நீதிமன்றம், குறுகிய காலத்தில் இறுதி அறிக்கையை வழங்க வேண்டும் என்று பொலிஸாருக்குக் கட்டளையிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சாண்டில்யன் வைஷாலி என்ற சிறுமி காய்ச்சல் மற்றும் தோலில் ஏற்பட்ட தொற்று காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருந்தார். அவருக்கு மணிக்கட்டில் ஊசி மூலம் மருந்து செலுத்தப்பட்டது. ஓரிரு நாள்களில் மணிக்கட்டு வீக்கம டைந்து பின்னர் அந்தப் பகுதி வெட்டி அகற்றப்பட்டது.

இந்த விடயத்தில் மருத்துவத் தவறு நேர்ந்துள்ளதாக சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டியதுடன், பல்வேறு தரப்பி னரிடம் தமக்கான நீதியையும் கோரியி ருந்தனர். இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில், மேலதிக நீதவான் நஜமி ஹுசைன் முன்னிலை யில் நேற்று விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கின் கடந்த தவணையில், “இந்த வழக்குத் தொடர்பான முழுமை யான விசாரணை அறிக்கையொன்றை சட்டமா அதிபருக்கு அனுப்பிவைத்துள் ளோம். எனவே அவரின் ஆலோசனை யைப் பெறுவதற்கான நீண்ட கால அவ காசத்தை நீதிமன்றம் வழங்கவேண்டும்” என்று பொலிஸார் நீதிமன்றில் கோரியி ருந்தனர். ஏற்கனவே இந்த வழக்கு இரண்டு வருடங்கள் கடந்து விட்டதைச் சுட்டிக்காட்டிய நீதிபதி, நீண்டதவணையை வழங்க மறுத்து, சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கான கால அவகாசத்தின் பொருட்டு நேற்றுவரை வழக்கை தவணையிட்டார்.

நேற்று வழக்கு நீதிமன்றில் விசார ணைக்கு எடுக்கப்பட்டபோது, வழக்குத் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கை இதுவரை சட்டமா அதிபருக்கு அனுப்பப்படவில்லை என்றும், கொழும் பில் உள்ள பொலிஸ் சட்டக்கல்லூரி ஊடாக இனிமேல்தான் சட்டமா அதி பருக்கு விசாரணை அறிக்கை அனுப்பப் படவுள்ளது என்றும் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி சார்பாக மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி எஸ்.கே.புரந்தரன், மன்றைப் பொலி ஸார் தவறாக வழிநடத்துகின்றனர் என் றும், வழக்கை காலந்தாழ்த்திக் கொண்டு செல்வதற்கு நீதிமன்றம் அனுமதிக்கக் கூடாது என்றும் கோரினார். கடந்த வழக் குத் தவணையில் முழுமையான விசா ரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று கூறி நீண்ட தவணை கோரிய பொலிஸார், தற்போது விசாரணை அறிக்கை இன்னமும் அனுப்பப்படவில்லை என்று குறிப்பிடுவ தையும் சுட்டிக்காட்டினார். சட்டமா அதிப ரின் ஆலோசனையைப் பெறுவதற்கு நீதிமன்றம் ஒரு கால எல்லையைப் பொலிஸாருக்கு வழங்க வேண்டும் என் றும் அவர் கோரிக்கை முன்வைத்தார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீத வான், இந்த வழக்கில் பொலிஸாரின் போக்கைக் கடுமையாகக் கண்டித்தார். இந்த வழக்கின் ஆரம்பத்தில் இருந்து மாறுபட்ட தகவல்களையே தெரிவித்து வருகின்றனர். வழக்குத் தொடுநர் தரப் பான பொலிஸ் தரப்பில் இருந்து ஒவ் வொரு வழக்குத் தவணையின்போதும் மேலதிக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட் டுள்ளன. பொலிஸாரின் செயற்பாடுகள் காலத்தை இழுத்தடிப்புச் செய்து நீதிமன் றத்தின் நேரத்தை வீணாக்குவதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்ப தற்கு குந்தகம் விளைவிப்பனவாகவும் அமைகின்றன.

இறுதி விசாரணை அறிக்கையை யாழ்ப் பாணம் பொலிஸ் தலைமையகம் குறு கிய காலத்தில், இல்லாவிட்டால் அடுத்த தவணையில் வழங்க வேண்டும். இன் றைய நீதிமன்ற வழக்குக் குறிப்பேடு களை வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் அனுப்பவேண்டும் என்று நீதவான் உத் தரவு பிறப்பித்தார். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கூட்டத்தில்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளைக் கூட்ட நடவடிக்கையில் எந்தவிதமான முறைகேடான விடயமும் நடைபெறவில்லை. குலநாயத்தின் பெயர் எந்தப் பதவிக்கும் முன்மொழியப்படாதது துரதிர்ஷ்டவசமானதே. ஆனால் அதற்காக கூட்டம் முறையாக நடக்கவில்லை என்று கூற முடியாது என்று தெரிவித்துள்ளார் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன். அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஞாயிற்றுக்கிழமை மே மாதம் 31 ஆம் திகதி மேற்சொன்ன கூட்டத்தில் நடைபெற்ற நிர்வாகிகள் தெரிவு சம்பந்தமாக இந்தக் கிளையின் செயலாளராக இருந்த சேவியர் குலநாயகம் அனுப்பியதாக கூறப்படும் கடிதம் ஒன்று ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று அறிகிறேன். அவரைத் தொடர்பு கொள்ளச் செய்த முயற்சி பலனளிக்காத காரணத்தால் இந்தத் தெளிவுபடுத்தல்களை வழங்குகின்றேன்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளை கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தெரிவுகள் இடம்பெறாமல் இருந்துள்ளது. கிளைக் கூட்டத்தைக் கூட்டுமாறு நானும் எழுத்து மூலம் கோரியிருக்கிறேன். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் சேவியர் குலநாயகம், கிளைத் தலைவர் திரு. கனகசபாபதியின் இணக்கப்பாட்டுடன் கூட்டியிருந்தார். கூட்டத்தின் ஆரம்பத்தில் இது சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கும் அவரே பதிலளித்து கூட்டம் முறையே கூட்டப்பட்டதை உறுதிப்படுத்தியதுடன் கனகசபாபதி கூட்டத்துக்கு சமுகமளிக்க மாட்டார் என்று அறிவித்திருந்ததையும் வெளிப்படுத்தினார்.

கிளைத் தலைவர் இல்லாத நிலையில் தெரிவுகளை நடத்துவதற்கு தற்காலிகமாகத் தலைவராக எனது பெயர் பிரேரிக்கப்பட்டது. வேறு பெயர்கள் பிரேரிக்கப்படவில்லை. தற்காலிகத் தலைமை அந்தக் கூட்டத்தில்தான் தீர்மானிக்கப்பட முடியும். கிளைச் செயலாளரை தலைமை தாங்குமாறு முன்னரே எவரும் அறிவுறுத்த முடியாது. அப்படி அறிவுறுத்தியதாக எவரும் கூறவும் இல்லை.

தெரிவுகள் நடைபெற்ற போது முதலில் செயலாளராக கேசவன் சயந்தனின் பெயர் முன் மொழியப்பட்டு வழிமொழியப் பட்டது. இன்னொரு பெயரும் முன்மொழியப்பட்டாலும் அதை எவரும் வழிமொழியவில்லை. அதனால் சயந்தன் செயலாளராக அறிவிக்கப்பட்டார்.

தலைவர் பதவிக்கு சி.வி.கே. சிவஞானத்தின் பெயரை நான் முன்மொழிந்தபோது மூவர் அதை ஒரே நேரத்தில் வழிமொழிந்தனர். ஆனால் தலைமை தாங்குபவரின் முன்மொழிவு வழிமொழியத் தேவையில்லை என்று மட்டும் தான் நான் கூறினேன். அது தான் கூட்டங்களுக்கான சட்டமும் கூட. வேறு பெயர்கள் எதுவும் முன்மொழியப்படாத நிலையில் அவர் கிளைத் தலைவராக நியமிக்கப்பட்டார். அது போலவே சகல பதவிகளுக்கும் ஒவ்வொருவரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டு வழிமொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. வேறு பெயர்கள் முன்மொழியப்படாத நிலையில் சகல நியமனங்களும் ஏகமனதாகவே இடம் பெற்றன. இந்தச் செயற்பாடுகள் அனைத்தையும் குலநாயகமே பதிவு செய்தார்.

அனைத்துத் தெரிவுகளும் முடிந்த பின், உடுப்பிட்டிக் கிளைத் தலைவர் எழுந்து, குலநாயகம் ஒரு பதவிக்கும் தெரிவாகவில்லையே என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்திய போது, உடுப்பிட்டித் தொகுதியில் இருந்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் தான் இராஜினாமா செய்ய முன்வந்தார். ஆனால் குலநாயகம் அதை நிராகரித்து விட்டார். இதுவே கூட்டத்தில் நடந்தது. இந்த விடயங்களை குலநாயகமே பதிவும் செய்தார். கூட்ட நடவடிக்கையில் எவ்விதமான முறைகேடான விடயமும் நடைபெறவில்ல. குலநாயகமோ வேறு எவருமோ இறுதியில் எந்த ஆட்சேபனையையும் எழுப்பவில்லை. புதிய செயலாளர் சயந்தனின் நன்றி உரையோடு கூட்டம் நிறைவு பெற்றது.

குலநாயத்தின் பெயர் எந்தப் பதவிக்கும் முன்மொழியப்படாதது
துரதிர்ஷ்டவசமானதே. ஆனால் அதற்காக கூட்டம் முறையாக நடக்கவில்லை என்று கூற முடியாது. இது தொடர்பாகத் தலைவரோடு நான் பேசியுள்ளேன். கிளைத் தலைவர் தெரிவை மீளவும் செய்ய நாம் தயார். முறையாக அதற்கான கோரிக்கை வைக்கப்படுமாக இருந்தால் மீளவும் கூட்டத்தைக் கூட்டித் தெரிவை நாம் நடத்தலாம் - என்றுள்ளது. (அ-எ-26)

## பழைய...

எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அனுமதி கோரி சட்டமா அதிபருக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1917ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இந்த அறக்கொடை நிதியம், 1829ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் முதலாவது அரசாங்க அதிபரான சேர். பேர்சிவல் அக்லண்ட் டைக் என்பவரால் கொள்வனவு செய்யப்பட்டு, அரசாங்க அதிபரின் வாசஸ்தலமாகப் பயன்படுத்தப்பட்ட காணியாகும். இந்தக் காணியின் இயற்கை அழகு மற்றும் சுற்றுச்சூழலைப் பேணுவதற்காகவே இது அறக்கொடை நிதியமாக உருவாக்கப்பட்டது.

இந்த அறக்கொடை நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையானது, 2025.06.30 அன்று உருவாக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புச் சாதனத்தின் நோக்கங்களுக்கு முரணாகச் செயற்பட்டு வருகின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்தச் சாதனத்தின் 05 (உ) வாசகத்தின்படி, காணியைக் கொடையளிக்கவோ, விற்கவோ அல்லது இயற்கைச் சூழலைப் பாதிக்கும் வகையிலான புதிய கட்டடங்களை நிர்மாணிக்கவோ, மரங்களை வெட்டவோ கூடாது. இருப்பினும், தற்போதைய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது இந்த விதிகளை மீறி, உள்ளக விளையாட்டரங்கு ஒன்றை நிர்மாணிப்பதற்காக 12 பரப்பு காணியைக் கொடையளித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் மருதலிங்கம் பிரதீபன் உள்ளிட்ட சில பொறுப்பாளர்கள், சபையின் ஏனையோரின் சம்மதமின்றி இக்கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த அறக்கொடை நிதியம் ஒரு பொது நம்பிக்கைப் பொறுப்பு என்பதால், நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் இந்தச் செயற்பாடுகளை நீதிமன்றத்தின் ஊடாகத் தடுத்து நிறுத்துவதற்குச் சட்டமா அதிபரின் முன் அனுமதி அவசியமாகும். அரசாங்கத்தின் உதவியுடன் இந்தக் கட்டுமானங்கள் ஆரம்பிக்கப்படவிருப்பதால், சுற்றுச்சூழலையும், பறவைகளின் வாழிடத்தையும் பாதுகாக்கும் நோக்கில், உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான அனுமதியை விரைந்து வழங்க வேண்டும்என்றுள்ளது.

இந்தக் கடிதத்தை சுந்தரம் சிவஞானசுந்தரம், மனோகரன் சசிகரன், விமலன் ராஜ்குமார் துஸ்யந்தன் மற்றும் குகதாசன் தனுசன் ஆகியோர் சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ளனர். (அ-எ-26)

## திறைசேரிக்கு...

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் இலங்கைக்குக் கிடைக்க வேண்டிய 695 மில்லியன் டொலர், திறைசேரியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

பிரதி நிதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## கோத்தாவுக்கு...

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு அமையவே கோட்டை நீதவான் பசன் அமரசேன இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக, அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ள வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## செம்மணிப்...

டன. செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கையின் 15ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று நடைபெற்றன.

மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கையில் இதுவரை 34 என்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, புதைகுழியில் என்புக் குவியல்கள் இரு இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும், மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கையில் றுகுணு பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்திருப்பதால் அகழ்வு ஆய்வுத் தளம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்றும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளில் 275 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 272 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி எஸ். லெனின்குமார் முன்னிலையில் இந்த அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட மருத்துவ அதிகாரி செ.பிரணவன், ருகுணு பல்கலைக்கழக தொல்லியல்துறை மாணவர்கள், தடயவியல் பொலிஸார், சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் உள்ளிட்ட குழுவினர் அகழ்வுப் பணிகளில் பங்கேற்றுள்ளனர். (அ-எ-26)

**வேலையாள் தேவை**

கொடிகாமத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு கொத்து, றைஸ் போடத்தெரிந்த வேலையாள் தேவை.
அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
(CS61578) J-1
தொடர்புகளுக்கு:- 077 948 4887

# பழைய மாணவர் சங்கத்தின் கூட்டத்துக்கு நீதிமன்றத்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தடைசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த மாதம் 17ஆம் திகதி உருத்திராமாவத்தியில் அமைந்துள்ள தமிழ்ச் சங்க மண்டபத்தில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு மாநகர சபையிடமிருந்து பெறப்பட்ட வரி மீளளிப்பு நிதி தொடர்பாக, கல்லூரி அபிவிருத்திக்காக வழங்கப்பட்டதாகக் கூறப்படும் கடிதம் மற்றும் கணக்குகள் தொடர்பில் முறைகேடுகள் இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டி, கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் அசோகன் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் நீதிமன்றம் இந்த எதிர்வரும் 8ஆம் திகதிவரை தடையுத்தரவை வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

**வேலையாட்கள் தேவை**

சுன்னாத்தில் அமைந்துள்ள புடைவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
விபரங்களுக்கு:076 63 23 554

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media